**பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 1.30 மணி** **தேர்வு - 4 (இயல் 7,8,9 )** **மதிப்பெண்கள் 50**

**பகுதி – I (மதிப்பெண்கள் 8)**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 7×1=7

**ii) குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. மேன்மை தரும் அறம் என்பது---------.

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

2. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்------.

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

3. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்--------.

அ) வெண்பா ஆ) அகவற்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

4. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்

இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது----------.

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

5. "இவள் தலையில் எழுதியதோ

கற்காலம்தான் எப்போதும்..." - இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

முதல்மழை விழுந்ததும் மேல்மண் பதமாகிவிட்டது
வெள்ளி முளைத்திடுது, விரைந்து போ நண்பா !
காளைகளை ஓட்டிக் கடுகிச் செல், முன்பு!
பொன்ஏர் தொழுது, புலன் வழிபட்டு
மாட்டைப் பூட்டி காட்டைக் கீறுவோம்" .

6. இப்பாடல் அடிகளில் உள்ள விளிச்சொல்லை கண்டுபிடித்து எழுதுக.

அ) விழுந்ததும் ஆ) தொழுது இ) நண்பா ஈ) கடுகிச்செல்

7. "கடுகி " பொருள் காண்க

அ)மனம் ஆ) விரைந்து இ) உள்ளம் ஈ) மேகம்

**பகுதி – II (மதிப்பெண்கள் 8)** **பிரிவு -1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 2×2=4

8. விடைக்கேற்ற வினாவினை அமைக்க.

அ. முதலாம் இராசராசன் காலம் தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன.

ஆ. இளங்கோவடிகள் சேர மரபைச்சார்ந்தவர்.

9. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

10. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர்– சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

**பிரிவு -2**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வெண்டும்.** **2×2=4**

11. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

12. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.

அ) தாமரை இலை நீர்போல – ஆ) மழைமுகம் காணாப் பயிர்போல –

13. மரபுத்தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

அ) மனக்கோட்டை - ஆ) கண்ணும் கருத்தும் -

**பகுதி – III (மதிப்பெண்கள் 9) பிரிவு - 1**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **1×3=3**

14. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகர் காப்போம்' – இடம்சுட்டிப் பொருள் தருக.

15. கீழ்க்காணும் உரையினைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

இந்திய விடுதலைக்குப்பிறகுமாநிலங்களைமொழிவாரியாகப்பிரித்தனர். அப்போது, ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ் மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார் தமிழரசர் கழகம் சென்னையிலும், திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது. சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களிலும் வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்கியது.

அ) இந்திய மாநிலங்கள் எப்பொழுது பிரிக்கப்பட்டது?

ஆ) சித்தூர் மாவட்டத்தை எதனுடனும் இணைக்க விரும்பினர்?

இ) வடக்கெல்லைப் போராட்டம் தொடங்கிய இடங்கள்?

**பிரிவு - 2**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **1×3=3**

16. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

17. "தூசும் துகிரும் " எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை பிழையின்றி எழுதுக.

**பிரிவு - 3**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **1×3=3**

18. "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

19. எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும் அணி எது ? அதனைச் சான்றுடன் விளக்குக.

**பகுதி – IV (மதிப்பெண்கள் (10)**

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** **2×5=10**

20. அ) பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக. (அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் " என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியர்க்குக் கடிதம் எழுதுக.

21. அ) மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம் நிரப்புக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamil.

**பகுதி - V (மதிப்பெண்கள் 16)**

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க. 2×8=16**

22. அ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவை என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக. (அல்லது)

ஆ)ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

23. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.

குறிப்புகள் : முன்னுரை – வருவாய்க்கும் தேவைக்கும் ஏற்ப செலவு – சிக்கனம் கஞ்சத்தனம் அன்று – சேமிப்பதால் ஏற்படும் நன்மைகள் – சேமிப்புக்கு ஏற்ற நிறுவனங்கள் – முடிவுரை (அல்லது)

ஆ)"ஒருவன் இருக்கின்றான்" என்ற கதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தரைப் பற்றி எழுதுக.

www.Padasalai.Net

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : தேதி : வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர்/ பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் :
   முகவரி
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவெண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணக்கு | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப்பிரிவும்
    பயிற்று மொழியும் :

மாணவ/மாணவியின் கையெழுத்து

www.Padasalai.Net